Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 07 | 20-04-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 61

வவுனியா நகரில்
வசந்தம் வீசும்
புடைவை உலகில் உங்களின்
நட்புக்கு.....
சாந்தா ரெக்ஸ்
பஜார் வீதி, வவுனியா
T.P:24-22879
(சி-7828)



நேற்றுக்காலை கிளி. மூதாளர் பேணலகத்தில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு உண்ணாவிரதத்தையும் இரவு, சந்திரன் பூங்காவில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை திருமறவன் ஏற்றுவதையும் அந்நிகழ்வில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# தமிழர் தாயகமெங்கும் அன்னை பூபதி நினைவு நாள் மாவட்ட, பிரதேச ரீதியாக உணர்வுபூர்வ அனுஷ்டிப்பு

## மட்டு. அன்னை பூபதி நினைவாலயத்தில் சிறப்பு நிகழ்வு

(நமது செய்தியாளர்)

**தியாகி அன்னை பூபதியின் 15 ஆவது ஆண்டு நினைவு நாளும் நாட்டுப்பற்றாளர் நினைவுநாளும் மாவட்ட, பிரதேச ரீதியாக நேற்று தமிழீழ தாயகம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. அன்னை பூபதியின் நினைவாலயம் அமைந்திருக்கும் மட்டக்களப்பு நாவலடியிலும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் பேரெழுச்சியுடன் நடைபெற்றன.**

திருகோணமலை,மன்னார், வவுனியா வலயங்கள் உட்பட மாவட்ட ரீதியாகவும் யாழ்ப்பாணத்தில் கோட்ட ரீதியாகவும் இந்நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வுகள் இடம்பெற்ற சகல இடங்களிலும் காலை 9.00மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, தேசியக் கொடி ஏற்றப்பட்டு, அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டு கருத்துரைகளும் வழங்கப்பட்டதுடன் தொடர்ந்து உண்ணாவிரத நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் நேற்றுக்காலை சந்திரன் பூங்காவில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் அன்னை பூபதி அவர்களின் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

பொதுச்சுடரினை கிளி.மாவட்ட தமிழீழ எழுச்சிப்பேரவைச் செயலர் பொன்.விநாயகமூர்த்தி ஏற்றிவைக்க தமிமீழத் தேசியக் கொடியினை

(8ஆம் பக்கம் பார்க்க)

*புலிகளின் நிகழ்வுகள் நடைபெற்ற*

# வவு. பாடசாலை அதிபரிடம் படையினர் விளக்கம் கோரல்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நினைவு நிகழ்வுகள் வவுனியா நெளுக்குளம் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்டமை தொடர்பாக சிறிலங்காப் படையினரின் வன்னிப் பிராந்திய தலைமையகம் விளக்கம் கோரியுள்ளது. இவ்விளக்கம் கோரும் கடிதங்கள் வவுனியா வலயக் கல்விப் பணிப் பாளருக்கும், நிகழ்வு நடைபெற்ற பாடசாலை யின் அதிபருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் வன்னிப் பிராந்தியப் படை உயரதிகாரிகளுக்கும் விடு தலைப் புலிகளின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும் இடையே நாளை கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

# மூதூர் பிரதேசத்தில் பெரும் உணவுத் தட்டுப்பாடு!

(திருமலை)

திருகோணமலை மூதூரில் இடம்பெற்ற இனமோதல்களைத் தொடர்ந்து மக்கள் இடம்பெயர்ந்திருப்பதால் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தோருக்கான அவசர உணவு உதவிகள் வழங்கப்பட்ட போதிலும் கூட கூட்டுறவுக்கடைகள் மற்றும் ஏனைய வியாபார நிலையங்களும் தொடர்ச்சியாக மூடப்பட்டிருப்பதால் உணவுப்பொருட்களைப் பெறமுடியாத நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, மூதூர் பிரதேச செயலகத்தினால், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

# மூதூரில் பதற்றமான நிலை நீடிப்பு நேற்றும் இரவு நேர ஊரடங்கு அமுல்

## மீறுவோர் மீதும் கடும் நடவடிக்கைக்கு உத்தரவு

(திருமலை)

திருமலை - மூதூர் பிரதேசத்தில் தொடர்ந்தும் பதற்றநிலை தொடர்வதினால் அங்கு நேற்றும் இரவு நேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஊரடங்கை மீறுவோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப் பட்டுள்ளது. இதேவேளை, நேற்றுப் பகல் அசாதாரண சூழ்நிலை காணப் பட்டபோதும் அசம்பாவிதங்கள் எவையும் இடம்பெறவில்லை.

அங்கு இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் முடிவுக்கு வரும் வரை இந்த ஊரடங்கு அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

மாலை 6.00 மணிமுதல் காலை 6.00 மணிவரை இந்த ஊரடங்குச்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா சனாதிபதி பங்களாதேஷ் விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்களாதேஷிற்கு விஜயம் செய்துள்ளார்.

இவரது விஜயத்தின் போது பங்களாதேஷ் பிரதமரையும் பல முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

சார்க் அமைப்பை மீண்டும் செயற்படுத்துவது குறித்தும் தெற்காசியாவில் நிலவும் நிலவரங்கள் குறித்தும் இரு நாட்டு தலைவர்களும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

# சமாதானத்தை விரும்பாத சக்திகள் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றன

## திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(திருகோணமலை)

சமாதானத்தை விரும்பாத தீய சக்திகளே மூதூரில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையியே குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் கூறியுள்ளார்.

இந்தக் குழுக்கள் குறுகிய அரசியல் இலாபம் தேடும் முயற்சிக்குத்

(8ஆம் பக்கம் பார்க்க)

# பிரி. முன்னாள் படைத்துறை அதிகாரி மட்டு. மாவட்டத்திற்கு விஜயம்

(மட்டக்களப்பு)

பிரித்தானிய முன்னாள் படைத்துறை அதிகாரி மிக்கல் றோஸ் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் மட்டக்களப்பு விமானப்படை முகாமிற்குச் சென்ற இவர் முதற்கட்டமாக விமானப்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

பின்னர் மட்டக்களப்பு மாநகர சபைக்கட்டடத்தில் இயங்கும் 233ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்திற்குச் சென்று படைத்துறை அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் சிறிலங்கா போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இயல்பு நிலையை உருவாக்க

# மூதூரில் உயர் மட்ட பாதுகாப்புக் குழு மாநாடு

(திருமலை)

மூதூரில் இயல்பு நிலையை உருவாக்கவும், மக்களிடையே புரிந்துணர்வை உருவாக்கும் வகையிலும் உயர் மட்ட பாதுகாப்பு குழுவின் மாநாடு இன்று இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசிய கூட்டமைப்பு, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் படையதிகாரிகள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

## வரி விளம்பரம்

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

**ஜோண் கல்வி நிலையம்**

முல்லை. வீதி, புதுக்குடியிருப்பு. 2005 **A/L** கலை வகுப்புக்களும், **O/L** மீட்டல் வகுப்புக்களும் ஆரம்பமா கின்றன.

காலம்: 21.04.2003 - திங்கள் பி.ப 3.00 மணி. ஏனைய வகுப்புக்களும் நடைபெறுகின்றன. நிர்வாகி. (2842)

### காணாமற்போயுள்ளது

வெள்ளை எருது **R.A.** கறுப்பு (மயிலை)-குறி 125 சி.பி ஆகிய குறிப்பு உடைய மாடு 05.04.2003 காணாமற் போயுள்ளது. எனவே கண்டவர்கள் உடையார்கட்டு மது தேனீர்க் கடையில் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். (2843)

### ஆண் பராமரிப்பாளர் தேவை

அன்புச் சோலை மூதாளர் பேணலகத்திற்கு ஆண் பராமரிப் பாளர் தேவை. வயது 30-45 வரை சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். முடிவுத் திகதி - 25.04.2003. முகவரி அன்புச் சோலை, கனகபுரம் கிளிநொச்சி. (சி-8087)

19.04.2003 (சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் வட்டக்கச்சி பண்ணைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் றிச்சட் றொபேட் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று தவறி விட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியிலோ, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகத்திலோ ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3097)

சிற்றம்பலம் தர்மலிங்கம் ஆகிய நான் மன்னாகண்டலில் இருந்து வவுனியா சென்ற இடத்தில் எனது தேசிய அடையாள அட்டையும் பேர்ஸ்சும் தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். (2845)

### வகுப்புக்கள் ஆரம்பம்

ஸ்ரார் அக்கடமி மல்லாவியில் **A/L** 2005 கலைப்பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம் 21.04.2003. அன்று பிற்பகல் 4 மணிக்கு தமிழ் - **G.**வாமன் அளவையியல் க. யூட், புவியியல் **S.K.** மதன் இந்து நாகரிகம் / சமயம் **U.** சிவா (2922)

### O/L வர்த்தகம்

2004இல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வர்த்தகம் பிரத்தியேக வகுப்பு ஆரம்பமாகிறது. தொடர்புகளுக்கு திரு.தி.வரதன் நீதி மன்ற முன் வீதி, கிளிநொச்சி. (3090)

## பொன்விழா வாழ்த்து

மருத்துவ சேவையில் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் காணும் மருத்துவ முனைவர் கெங்காதரன் அவர்களை சீரும்சிறப்புடனும் வாழ்ந்து தனது சேவையினை தொடர்ந்தும் எம்மக்களுக்கு வழங்க வாழ்த்துகின்றோம்.

*மருத்துவ உலகின் மங்காத தீபமே!*
*மாண்புறு சேவையில் மலைகளின் சிகரமே!*
*பொன்விழா வேளையில் புனிதனே!*
*வாழ்த்தினோம் புகழ் மிகப்பெற்று நீர்*
*பல்லாண்டு வாழ்கவே!*

நலன்புரிச் சங்கம்
பணிப்பாளர்,
பணியாளர்கள்.

(சி-8085)

## பொன்விழா வாழ்த்து

மருத்துவ சேவையில் பொன்விழாக் காணும்
மருத்துவ முனைவர் கெங்காதரன் அவர்களை
என்றென்றும் வாழ மனமுவந்து
வாழ்த்துகின்றோம்.
வைத்திய சேவை தன்னில் வாய்ந்ததோர் மணி
விளக்கே!
பொன் விழாக் காணும் வேளை
புகழுடன் வாழ்க நீவிர்!

மருந்துப் பால்மா வகைகள்
(தனியார்) வரையுள்ளது.
பணிப்பாளர்,
பணியாளர்கள்.

(சி-8086)

## கிளி. அழகியல் கலாமன்ற செயற்பாட்டுக்குழுக் கூட்டம்

கிளிநொச்சி அழகியல் கலாமன்ற செயற்பாட்டுக்குழுக் கூட்டம் நேற்று பி.ப.4.30 மணிக்கு கலாமன்றத் தலைவர் டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்ட நிகழ்வில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் வன்னி கல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம், கிளி. வலயக் கல்விப் பணிப் பாளர் ப..அரியரத்தினம் மற்றும் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அழகியல் கலா மன்றத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டதுடன், சிறான் செயலகம் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் செயற்பாட்டுத் திட்டங்களை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப் பட்டது. (சோ)

## 31ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

| இகமதில் | | பரமதில் |
|---|---|---|
| 1948 | | 2003 |
| 10 | | 03 |
| 01 | | 21 |



### முத்துக்குமாரு - ஸ்ரீ வைகுந்தநாதன்

(யாழ் - நாயன்மார்கட்டு)

பரிவுடன் எம்மை வளர்த்த பாசத்தின் தந்தையே!
நேசமுடனும் அடக்கத்துடனும் நாம் வாழ வழிகாட்டி- வைத்தவரே
கொடிய வறுமை துன்பத்திலும் தனிமரமாக எமை காத்தவரே
பண்பு பாசம் பக்தியுடன் பிள்ளைகள் மனைவி நாம் - உம்பாதம் தொழுவோமே
ஈசன் உடனிருந்து எமக்கருள் செய்வீரே.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

21.03.2003 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் சோகச்செய்தி கேட்டு எம்துயரில் கலந்து எமக்கு அனுதாபம் தெரிவித்த அனைத்துக் கருணை உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எம் தந்தையின் ஆத்ம சாந்திக்காக 20.04.2003 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

14ஆம் கட்டை
ஒட்டுசுட்டான். (சி-2844)

மனைவி, பிள்ளைகள்.



# பொன் விழா வாழ்த்து

**மகத்தான மருத்துவ சேவையில்**
**இன்று பொன் விழாக்காணும்**
**மருத்துவ முனைவர் கெங்காதரன் அவர்கள்**
**பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்**
**வாழ்ந்து தனது சேவையினைத் தொடர்ந்தும்**
**எம் மக்களுக்கு வழங்க வாழ்த்துகின்றோம்.**



மருத்துவர்கள் பற்றாக்குறையான வன்னி மண்ணில், நெருக்கடியான போர்ச்சூழலில் எம் மண்ணில் நிலைத்து நின்று முதிர்ந்த வயதிலும் தனது மருத்துவ சேவையினை எம் மக்களுக்கு வழங்கியும் பல இளைய மருத்துவர்களுக்கு தனது அனுபவத்தினையும் அறிவினையும் ஊட்டி வழிகாட்டியாகவும் திகழ்ந்த தன்னலமற்ற சேவையாளனையும், அவருக்கு உறுதுணையாக நிற்கும் அவர்தம் துணைவியாரையும் குடும்பத்தினரையும் பொன் விழா நாளில் மனம் நிறைத்து வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

**பணிப்பாளர், மருத்துவர்கள், பணியாளர்கள்,**
**டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த தனியார் மருத்துவமனை**
**புதுக்குடியிருப்பு / கிளிநொச்சி.**

(சி-3084)

# ஈராக்கிலுள்ள வெளிநாட்டுப் படைகள் வெளியேற்றம்!

# மறுசீரமைப்புப் பணியில் ஐ.நா.வுக்கு முக்கிய பங்கு!!

## கோரிக்கைகள் வலுவடைகின்றன

**ஈராக்கிலிருந்து அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் விரைவில் வெளியேற வேண்டும். அத்தோடு அந்நாட்டின் மறுசீரமைப்புப் பணியில் ஐக்கிய நாடுகள் சபை முக்கியமான பங்கை வகிக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற ஆரம்பித்துள்ளன. ஈராக்கை சூழவுள்ள நாடுகள் கூட்டாக இவ்வாறான விடயங்களை வலியுறுத்தியுள்ளன.**

மத்திய கிழக்குப்பிராந்தியத்திலுள்ள நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் தற்போதைய நிலவரம் குறித்து கூடி ஆராய்ந்தனர். போருக்குப்பின் ஈராக் நிலவரம் என்பது குறித்து ஆராயும் பொருட்டு நேற்று முன்தினம் சவுதி அரேபியாவின் தலைநகர் றியாத்தில் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இந்த அவசர கூட்டத்தில் ஈராக்கில் புதிய அரசு அமைப்பதை ஈராக் மக்களே முடிவு செய்ய வேண்டுமென வெளியுறவு அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஈராக் மக்கள் திறமை வாய்ந்தவர்கள் எனவும், எது நல்லது என அவர்களுக்கு நன்றாகத் தெரியும் எனவும் கூட்டத்தின் முடிவில் செய்தி யாளர்களிடம் பேசிய சவுதி அரேபிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். ஈராக்கில் புதிய அரசு அமைக்கப்படும் வரை அமெரிக்க, பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் சட்ட ஒழுங்கை பராமரிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில் சவுதி அரேபியா, குவைத், சிரியா, யோர்தான், துருக்கி, ஈரான், எகிப்து, பஹ்ரேன் நாட்டு வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கப் படையினர் தங்களின் இராணுவ முகாமில் சந்தேகத்தின் பேரில் ஈராக்கியர் ஒருவரைத் தடுத்து வைத்திருக்கின்றனர்.

## வெனிசுவெலாவில் கலவரம் 11 சிறைக் கைதிகள் பலி

வெனிசுவெலாவில் பாரிய சிறைச்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குழு மோதலில் 11 சிறைக் கைதிகள் துப்பாக்கியால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரண்டு பேரின் தலைகள் வெட்டப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளுக்கு எதிரானவர்கள் சிறைக்குள் நுழைந்த போதே கொலைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச் சிறைச்சாலைகளில் அடிக்கடி கலவரங்கள் இடம்பெற்று வருகின்றன. 2001 ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கும் 2002 ஆண்டு செப்டெம்பர் மாதத்திற்கும் இடையே அந்நாட்டின் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற கலவரங்களில் 240 கைதிகள் கொல்லப்பட்டதுடன் 1249 பேர் காயமடைந்துள்ளார்கள் என உள்துறை நீதியமைச்சு தெரிவித்துள்ளது.



நசரியா குடியிருப்பு வாசிகள் அமெரிக்க படையினர் பக்தாத்துள் நுழைவதை எதிர்க்கும் காட்சி



ரிக்கிறிட் நகரத்தில் கட்டடம் எரிந்து புகைமண்டலமாக இருக்கும் பொழுது ஈராக்கிய ஆயுதம் தரித்தவர் அவ்விடத்தில் காவல் புரிகிறார்.

## புதுடில்லியில் சார்ஸ் நோயாளி

புதுடில்லியிலுள்ள இர்ரம னோகர் லூகியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நியூசிலாந்து நாட்டவர் ஒருவருக்கு சார்ஸ் நோய் தாக்கியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவருக்கு சோதனையின் போது சார்ஸ் நோயிற்கான வைரஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தேசிய தொற்று நோய்கள் நிறுவன இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## பழ.நெடுமாறன் பிணைமனு தீர்ப்பு நாளை வெளியிடத் தீர்மானம்

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறனின் பிணைமனு மீதான தீர்ப்பு 21-ம்திகதி வழங்கப்படவுள்ளது.

பொடோ சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நெடுமாறன், சுப.வீரபாண்டியன், டாக்டர் தாயப்பன், பாவாணன், பரந்தாமன் மற்றும் யாகுல் சுனில் ஆகியோர் தங்களை பிணையில் விடுவிக்குமாறு கூறி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்கள். இம்மனுமீதான விசாரணை முடிந்துவிட்ட நிலையில் இது தொடர்பான தீர்ப்பு பலமுறை ஒத்திவைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத் தீர்ப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி வழங்கப்படும் என பொடோ நீதிமன்ற நீதிபதி ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.



ஸ்பெயின் நாட்டின் வீதியில் பெற்றோலிய ஓயிலில் தோய்ந்த நண்டு ஊர்ந்து செல்லும் காட்சி அதன் உருவம் முற்றாக மாற்றம் அடைந்துள்ளது.

## இந்தியா அமைதியையும் நட்புறவையுமே அயல் நாடுகளுடன் பேண விழைகிறது

### பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்து

(புதுடில்லி)

இந்தியா தனது அண்டை நாடுகளுடன் எப்பொழுதும் அமைதியையும் நட்புறவையும் நாடுகின்றது என்று பிரதமர் வாஜபாய் கூறியுள்ளார்.

ஸ்ரீநகரில் பொதுக் கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவின் இந்த எண்ணத்தை அண்டை நாடுகளும் பிரதிபலிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

எந்தப் பிரச்சினையையும் இந்தியா அமைதியாகவே தீர்க்கத் தயாராக இருக்கின்றது என்று கூறிய பிரதமர், இதற்காகவே தாம் லாகூருக்கு பயணம் மேற்கொண்டதாகக் கூறினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே அமைதியை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பை ஆக்கிராவில் பேச்சுக்கள் நடத்த நான் அழைத்திருந்தேன். ஆனால், பாகிஸ்தான் சனாதிபதி அதற்கேற்றவாறு நடந்து கொள்ளவில்லை.

ஜம்முகாஷ்மீரில் அமைதியை ஏற்படுத்தவும், அம் மாநிலத்தின் வளர்ச்சிக்கும், அங்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் மத்திய அரசு மாநில அரசுடன் ஒருங்கிணைந்து செயற்படும் என்பதுடன், காஷ்மீர் புத்தாண்டு அம் மாநிலத்தில் அமைதியையும், வழமையையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## 'பொடோ' குறித்து ஆராய்வு

(சென்னை)

பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்துவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் மத்திய அரசால் அண்மையில் அமைக்கப்பட்ட பொடோ ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் இந்தக் குழு விரைவில் செயற்படும் என்றும் மத்திய உள்துறைச் செயலாளர் கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

பொடோ சட்டம் தவறுதலாகப் பயன்படுத்தப்படுவதாக சில மாநிலங்களிலிருந்து ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் வந்திருப்பதாகவும், இத்தகைய குற்றச் சாட்டுக்களை ஓய்வு பெற்ற நீதிபதி அருண் சகாரியா தலைமையிலான 03 உறுப்பினர் குழு ஆராயும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## இந்திய ஆலோசனைகளை பாகிஸ்தான் வரவேற்கிறது!

(இஸ்லாமாபாத்)

துப்பாக்கி முனையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க முடியும் என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பேசியிருப்பதைப் பாகிஸ்தானியப் பிரதமர் ஜமாலி வரவேற்றுள்ளார்.

தொலைக் காட்சிக்கு பேட்டியளித்த அவர், இந்தியாவுடன் சமாதானமாக வாழ பாகிஸ்தான் விரும்புகிறது. இதற்காக இந்தியா கூறும் எந்தவொரு யோசனையையும் வரவேற்கிறது என கூறியுள்ளார்.

# புதிய தலைவர்களுடன் சிறிலங்கா அணி; சாதிக்கப் போவது என்ன?

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் புதிய தலைவர்களாக மார்வன் அத்தபத்துவும், ஹசான் திலகரட்ணவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் சார்ஜாவில் நிறைவுபெற்ற நான்கு முனைப் போட்டிகளை அடுத்து தலைவர் பதவியில் இருந்து ஜெயசூரியா விலகிய நிலையில் இவ் வெற்றிடத்திற்கு யாரை நியமிப்பது என்ற இழுபறிநிலை ஒருவாறாக நீங்கியுள்ளது.



ஜெயசூரியாவுடன் புதிய டெஸ்ட் அணித்தலைவர்

35 வயதான ஹசான் திலகரட்ண 1986 இல் சார்ஜாவில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி மூலம் சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமானவர்.

1989இல் ஹோபார்ட்டில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவர் முதல் தடவையாகப் பங்குபற்றினார்.

இதுவரை 73டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 10 சதங்கள் உட்பட 4025 ஓட்டங்களையும் பெற்றுள்ளதுடன் அதிகூடிய ஓட்டங்களாக ஆட்டம் இழக்காது 204 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். களத்தடுப்பில் 111பிடிகளையும் எடுத்துள்ளார். 200 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 2 சதங்கள், 13 அரைச்சதங்கள் உட்பட 3789 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இத்துடன் 1999 இல் லாகூரில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சிறிலங்கா அணிக்கு தலைமை தாங்கினார் ஹசான்.

33வயதான மாவன் அத்தபத்து 1990இல் சர்வதேச போட்டிகளுக்கு அறிமுகமாகி 61 டெஸ்ட் போட்டிகளில் 10 சதங்கள், 11 அரைச் சதங்கள் உட்பட 3611 ஓட்டங்களைக் குவித்துள்ளதுடன் ஐந்து இரட்டை சதங்களையும் பெற்றுள்ளார். 193 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 10 சதங்கள், 45 அரைச் சதங்கள் உட்பட 6407 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவரின் தலைமையில் முன்னர் மூன்று ஒருநாள் போட்டிகளில் சிறிலங்கா அணி விளையாடியுள்ளது. அவற்றில் இரு போட்டிகளில் வெற்றியும் பெற்றுள்ளது. மற்றைய போட்டியில் தோல்வி அடைந்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் உள்ளது போன்று டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி அணிகளுக்கு வெவ்வேறு தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றமை இதுவே முதல் தடவையாகும். அவுஸ்திரேலியா இருதலைவர்களை நியமித்ததன் மூலம் ஸ்ரீவ்வோவுக்கு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு வழங்கியது. அந்நிலை சிறிலங்காவின் ஹசான் திலகரட்ணவுக்கு நிகழலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகக்கிண்ணப் போட்டி நிறைவடைந்தது முதல் ஜெயசூரியா தனது தலைமைப்பதவிக்கு இராஜினாமாவை அறிவித்தார் அதனை விளையாட்டு அமைச்சு ஏற்றுக்கொள்ளாத நிலையில் சார்ஜா போட்டித்தொடருக்கு தலைமைப் பொறுப்பை ஏற்றுச் சென்றார்.

ஆனால் தான் அங்கு திறமையாக விளையாடினாலும் விளையாடாதுவிட்டாலும் தலைமைப் பதவியில் இருந்து விலகுவேன் என உறுதியாகத் தெரிவித்தார்.

1999ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் அர்ஜுண தலைமையிலான சிறிலங்கா அணி படுதோல்வி அடைந்து நாடு திரும்பியபோது அர்ஜுணாவிடமிருந்து பறிக்கப்பட்ட தலைமைப்பதவி அப்போது ஜெயசூரியாவிடம் கைமாறியது. அன்றிலிருந்து தனது அதிரடியாட்டத்தினாலும் அணி வீரர்களின் கூட்டு முயற்சியாலும் பல வெற்றிகளை பெற்ற தலைவர் என்ற பெருமையை பெற்றுவந்த ஜெயசூரியா, நடந்து முடிந்த உலகக்கிண்ணப் போட்டி நிறைவுடன் தனது ஓய்வை அறிவித்தார்.

ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை 118 போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ள ஜெயசூரியா 66 போட்டிகளில் வெற்றிக்கனியை சுவீகரித்துள்ளார்.

இவற்றில் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற மினி உலகக்கிண்ணம் உட்பட 7 வெற்றிக் கிண்ணங்களையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அத்துடன் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 9029 ஓட்டங்களை குவித்துள்ளதுடன் 246 விக்கெட்டுகளையும் பெற்றுள்ளார்.

இது இவ்வாறிருக்க இவரின் தலைமையிலேயே சிறிலங்கா அணி அதிக டெஸ்ட் வெற்றிகளைப் பெற்றுள்ளது. அதாவது 38 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 18 வெற்றிகளைப் பெற்றுள்ளதுடன் இதில் 9 போட்டிகளில் தொடர்ச்சியான வெற்றியையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இவ்வாறு சிறிலங்கா அணிக்குப் பெருமை சேர்த்த அணித்தலைவராக விளங்கிய ஜெயசூரியா தற்போது அப்பொறுப்பில் இருந்து விலகி அணியில் சக வீரர்களில் ஒருவராக மாறியுள்ளார். இது அவரின் துடுப்பாட்டத் திறனை மேலும் வலுப்பெறச்செய்யும் என்று கருதப்படுகிறது. அதிரடி ஆட்டத்தை கிரிக்கெட் உலகில் அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவராகத் திகழும் ஜெயசூரியா தற்போது 33வயதைக் கடந்துவிட்ட நிலையில் அவரின் அணிக்கான பங்கு எந்தவகையில் எதுவரை அமையப் போகிறது என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

ஜெயசூரியாவின் ஓய்வை அடுத்து எதிர்பார்க்கப்பட்டவாறே அத்தபத்து அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளபோதும் அவர் ஒருநாள் போட்டிக்கான அணியையே வழிநடத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார். டெஸ்ட் அணிக்கு திலகரட்ண நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி இருவரும் அனுபவம் நிறைந்த ஆட்டக்காரர்களாக திகழ்கின்ற போதும் வயதில் முதிர்ந்தவர்களாக காணப்



படுகின்றனர். இது அணியை தற்போது மாற்றங்களுக்கு இட்டுச் சென்றாலும் 2007ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிவரை தொடருமா என்பதே தற்போதைய கேள்வியாகவுள்ளது.

அத்தபத்துவைப்பொறுத்தவரை நீண்டகாலம் துணைத்தலைவராக இருந்த அனுபவத்தை கொண்டுள்ளதுடன். துடுப்பாட்டம், களத் தடுப்பு, என்பனவற்றில் சிறந்து விளங்குகின்றார். திலகரட்ணவை எடுத்துக்கொண்டால் நீண்ட காலத்திற்கு முன்பே அணியில் இடம்பெற்ற போதும் இடையிடையே அணியில் இருந்து நீக்கப்பட்டு வந்தவர்.

இந்த நிலையில் மீண்டும் டெஸ்ட் அணிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டு அவரின் தனிப்பட்ட திறமையினால் அணியில் நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளதுடன் ஒருநாள் அணியிலும் இடம்பிடித்தார். தற்போது அணியில் அதிக வயதைக்கொண்ட வராய் திகழும் இவர் இன்னும் எவ்வளவு காலம் அணியில் நிலைத்திருப்பார் என்பது உறுதியாகக் கூறமுடியாத நிலையில் அவருக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகக்கூட இப் பதவி இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. ஒட்டுமொத்தத்தில் ஜெயசூரியாவின் இராஜினாமாவுக்கும் தற்போதைய அணித் தலைவர்கள் தெரிவுக்கும் அணியில் ... மாறுதல்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது.

ஒரு அணிக்குத் தலைமை தாங்குபவருக்கு சிறந்த தலைமைத்துவப் பண்புகள் இருப்பதுடன் சிறப்பாக அணியை வழிநடத்திச் செல்வதற்கான திடமும், நம்பிக்கையும், மனவுறுதியும் அவசியம். இவை சர்வதேச போட்டிகளுக்கு வீரர்கள் இடம்பிடிக்கும் முன்னரே கழகமட்டத்திலான போட்டிகளுக்குத் தலைமை தாங்கிய அனுபவத்தை கொண்டிருப்பது அவசியம். அப்படிப்பட்டவர்கள் வயதில் குறைந்தவர்களாயினும் அணியை வழிநடத்திச் செல்வதில் சிறந்தவர்களாக விளங் குகின்றனர். இதற்கு உதாரணமாக தென்னாபிரிக்காவின் 22 வயதுடைய ஸ்மித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். இவர் சிறு வயதில் இருந்தே தலைமைத்துவப் பண்புகளுடன் விளையாடி வந்ததுடன் அவர் தலைமை வகித்த அணிகளை வெற்றிக்கு வழிநடத்திச் சென்றுள்ளார்.

இந்நிலையில் வயதில் குறைந்த, அனுபவம் வாய்ந்த வீரர்களை சிறிலங்கா அணி கொண்டுள்ள போதும் அண்மைக்காலத்தில் அவர்களின் விளையாட்டுத் தரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியைக் காரணமாக வைத்துக்கொண்டு வயதில் முதிர்ந்த இருவரை அணித் தலைவர்களாக நியமித்துள்ளது. இது அடுத்த உலகக்கிண்ணப் போட்டிவரை நிலைத்து நிற்குமா அன்றி இவ்வருட நிறைவிற்குள் அணியில் பலமாறுதல்களை உருவாக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# 2002ஆம் ஆண்டின் கால்பந்தாட்ட நாயகன்

சென்ற ஆண்டில் ஒரு மாதகாலம் உலகின் கவனத்தை தன்பால் ஈர்த்து வைத்திருந்த உதைபந்தாட்டத் திருவிழா நடந்து முடிந்தது யாவரும் அறிந்ததே. பெரும்பாலும் அனைவராலும் எதிர்பார்க்கப் பட்டபடியே உலக உதைபந் தாட்ட ரசிகர்களின் ஒட்டுமொத்த வசீகர நட்சத்திர நாயகன் “ரொனால்டோ” போட்ட இரு கோல்களோடு உலகக் கிண்ணத்தைத் தனதாக்கியது பிரேசில். நாடு திரும்பிய வீரர்களை அந்நாட்டின் சனாதிபதி உட்பட பத்துலட்சத்



துக்கும் மேற் பட்ட மக்கள் திரண்டிருந்து குதூகலத்துடன் வரவேற்றார்கள்.

கடந்த 72 வருடங்களில் நடைபெற்ற 17 உலகக்கிண்ண இறுதியாட்டங்களிலும் பங்குபற்றிய ஒரே அணி என்ற சாதனையோடு ஐந்துமுறை உலகக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்ட ஒரே அணி என்ற பெருமையையும் பெற்று உதைபந்தாட்டத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அணி என்பதை நிரூபித்தார்கள் பிரேசில் வீரர்கள்.

2002ஆம் ஆண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் விருது சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் ஸ்பெயினில் வழங்கப்பட்டது. இவ்விருதுக்கான இறுதிச் சுற்றில் ரொனால்டோ பிரான்ஸ் வீரர் ஸினடின்ஸிடன், ஜேர்மன் அணித் தலைவரும், ஐந்தாறு கோல்களால் ஏற்பட இருந்த தோல்வியைக் காப்பாற்றிய உலகின் முதல்த் தர கோல்காப்பாளரான ஒலிவர்கான் ஆகியோர் தெரிவாகியிருந்தனர்.

148 தேசிய அணிகளின் பயிற்றுனர்களின் வாக்குகள் மூலம் விருதுக்குரியவர் தெரிவு செய்யப்பட்டார். ரொனால்டோவுக்கு 59 வாக்குகள் உட்பட 357 புள்ளிகள் பெற்று முதலிடத்தையும், ஒலிவர்கான் 171 புள்ளிகள் பெற்று இரண்டாமிடத்தையும், 141 புள்ளிகளைப்பெற்று மூன்றாமிடத்தை ஸினடின்ஸிடனும் பெற்றார்கள்.

1996, 1997 ஆம் ஆண்டுகளிலும் சிறந்த வீரருக்கான விருது ரொனால்டோவுக்கே கிடைத்தது. இதன் மூலம் மூன்று தரம் வென்ற புதிய சாதனை முதல் வீரரும் இவரே. தனியொருவராக அதிக கோல்கள் போட்ட வீரராக (8கோல்கள்) வும் விளங்குகின்றார். (ஜேர்மன் வீரர் க்ளோசும், பிரேசில் வீரர் ரிவால்டோவும் ஐந்து கோல்களும், டென்மார்க் தொமாஸன், இத்தாலி ஷியெரி ஆகியோர் தலா நான்கு கோல்களும் மேலும் ஒன்பது வீரர்கள் தலா மூன்று கோல்களும், 13 வீரர்கள் தலா இரண்டு கோல்களும், 82பேர் தலா ஒரு கோல்களும் போட்டனர். இதில் மூன்று **(Own goals)** சொந்தப்பக்கமிருந்து போட்ட கோல்களும் அடங்கும்.)

உலகக்கிண்ணப் போட்டியில் தங்கப்பாதணிவிருதும் வெள்ளிப் பந்து விருதும் வழங்கப்பட்டது. அத்துடன் ஐரோப்பாவின் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருதும், உலகக் கால்பந்தாட்ட சஞ்சிகையின் சிறந்த வீரருக்கான விருதும் அண்மையில் ரொனால்டோவுக்கே வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு அரங்கு

- ஜெயந்திரன்

### தங்கக் காலணியைப் பரிசாகப் பெற்றோர்

| ஆண்டு | நாடுகள் | வீரர்கள் பெயர் | கோல்கள் |
|---|---|---|---|
| 1930 | ஆர்ஜன்டீனா | கிலர்மோஸ்டெமின் | 08 |
| 1934 | இத்தாலி | ஏஞ்சலோசிபாவியோ | 04 |
| | செக்கஸ்லோவியா | ஓல்ட்ரிச் நெஜட்லி | 04 |
| | ஜேர்மன் | எட்மன் கோஹன் | 04 |
| 1938 | பிரேசில் | லியோனிடஸ் | 08 |
| | | எடிமிர் | 09 |
| 1958 | பிரான்ஸ் | பென்டெய்ன் | 13 |
| 1962 | யுகொஸ் | ஜேர்கொவிக் | 04 |
| 1966 | போர்த்துக்கல் | யுசிமியா | 09 |
| 1970 | மேற்கு ஜேர்மன் | கெட்முல்லர் | 10 |
| 1974 | போலந்து | லேட்டோ | 07 |
| 1978 | ஆர்ஜன்டீனா | பரியோகெம்பஸ் | 06 |
| 1982 | இத்தாலி | டோலோரோசி | 06 |
| 1986 | இங்கிலாந்து | லினோகர் | 06 |
| 1990 | இத்தாலி | கிலாச்சி | 06 |
| 1994 | ரஷ்யா | செலன்கோ | 06 |
| 1998 | குரோசியா | டெவர்கர் | 06 |
| 2002 | பிரேசில் | ரொனால்டோ | 08 |

# பள்ளிவாசல் கூட்டம் அரசியலானமையே மூதூர் நிலைமைகளுக்கு காரணமாகும்

## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர்

இரு முஸ்லிம் வாலிபர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து மூதூரில் நிலவிய பதற்றத்தைத் தணிப்பதற்காக மூதூர் பள்ளிவாசலில் இடம்பெற்ற கூட்டம் அரசியலாக மாற்றமடைந்ததினால் தான் தற்போதைய மூதூர் பிரதேசத்தில் பதற்ற நிலைமை ஏற்பட்டது என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் டியூட்டர் முல்கீசன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

மூதூரில் கடந்த சில தினங்களாக நிலவிவரும் பதற்றம் தொடர்பான ஆரம்ப அறிக்கையைச் சுட்டிக் காட்டி இவ்வாறு குறிப்பிட்ட அவர், இந்த பதற்ற நிலைமைக்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என விடுதலைப் புலிகள் அமைப்பு தெரிவித்துள்ளனர் என்றார்.

தற்போது மூதூரில் இன முரண்பாட்டுச் சம்பவங்களே இடம்பெற்றுள்ளன என அவர் மேலும் கூறியுள்ளார்.

மூதூர் கட்டை பறிச்சானில் நேற்று முன்தினம் முஸ்லிம் காடையர்கள் நடத்திய கைக்குண்டு வீச்சிலும் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும் இரு தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளதும் தெரிந்ததே.

# தென்னாபிரிக்க முதலீட்டாளர் முதலீடு செய்ய விருப்பம்

சிறிலங்காவில் பாரிய முதலீடுகளை மேற்கொள்ள தென்னாபிரிக்காவின் பிரபல முன்னணி நிறுவனங்கள் விரும்பம் தெரிவித்துள்ளன. இதன் பொருட்டுத் தமது அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று தென்னாபிரிக்க அமைச்சர்கள் சிலர் தற்போது தென்னாபிரிக்காவில் உள்ள அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் இதனைத் தெரிவித்துள்ளனர்.

சமாதான நடவடிக்கைகள் இலங்கையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதைக் கருத்திற் கொண்டே தென்னா பிரிக்க முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வர விரும்பம் தெரிவித்துள்ளதாகத் தொழில் முயற்சி அபிவிருத்தித் தொழில் கொள்கை, முதலீட்டுக் கொள்கை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி நகர சுத்திகரிப்பு பணியில் பெண்களும் ஈடுபாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினரால் தற்போது பெண்களும் நகர சுத்திகரிப்பாளராக கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி தொழிலாளர்கள் தற்போது நகர சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருவதனை தினமும் காணக்கூடியதாகவுள்ளது. நகர சுத்திகரிப்பு பெண் தொழிளாலர்கள் தினமும் காலையில் கிளி. 1 ஆம் கட்ட வைத்திய சாலை முன்பாக சுத்திகரிப்புக் கடமையை ஆரம்பித்து கரடிப்போக்குச் சந்திவரை இக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். (சோ)

# மதுபான வேட்டையில் ஈடுபட்ட பொலிசார் மீது தாக்குதல்

சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்களை சுற்றிவளைத்துப் பிடிக்க முற்பட்ட பொலிஸார் மீது அவர்கள் நடத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி படுகாயத் திற்குள்ளாகி அநுராதபுரம் வைத்திய சாலையில் அனும திற்குட்பட்டுள்ளார். இச் சம்பவம் திறப்பளை என்ற இடத்தில் இடம்பெற்றது. மேற்படி நபர்கள் தப்பியோடி விட்டனர். இக்குழுவின் இராணுவத் திலிருந்து தப்பியோடிய ஒருவரும் இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# தாமரைக் கொடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் மரணம்

குளத்தில் குளிக்கச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் வவுனியா கொக்குவெளிக் குளத்தில் கடந்த வியாழனன்று இடம்பெற்றது.

56 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த ஏ.ரண்பண்டா (வயது-36) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

வழமைபோல் காலை குளத்தில் குளிக்கச் சென்ற சமயமே இவர் தாமரைக் கொடியில் சிக்குண்டு மரணமானார்.

# மூதூரில் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலை சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கையாகும்!

## கூட்டமைப்பு பா.உ. இரா.சம்பந்தன்

மூதூரில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பமான சூழ்நிலை சமாதானச் சூழலைக் குழப்பும் நடவடிக்கையாகுமென தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போதைய குழப்பமான சூழ்நிலை அவசியமற்ற ஒன்று. சமாதானத்தைக் குழப்பும் சக்திகளை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தியிருந்தால் இன்று இன்நிலை ஏற்பட்டிருக்காது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் எம்.பி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மூதூர் பகுதிக்கு இரா.சம்பந்தனும், துரை இரட்ணசிங்கம் எம்.பியும் நேரடியாக விஜயம் செய்தனர். இவ்விஜயத்தின் போது மூதூர் நிலவரம் குறித்து சம்பந்தன் எம்.பி. விசனம் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்திலாயினும் இவ்வாறான சமாதான விரோதச் சக்திகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். இரண்டு பேர் இல்லாமல் போய்விட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக விளக்கியுள்ளனர். ஆகவே இச் சம்பவமானது சமாதானச் சூழலைக் குழப்பும் சக்திகளின் திட்டமிட்ட நடவடிக்கையாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# குறிஞ்சி அணிக்கு வெற்றி

சித்திரைப் புத்தாண்டு தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் லக்கிஸ்ரார் 'பி' ஆணிக்கும், இராமநாதபுரம் குறிஞ்சி விளையாட்டு அணிக்கும் இடையில் லக்கிஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற சினேகபூர்வ கால்ப்பந்துப் போட்டியில் குறிஞ்சி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (12)

# கசிப்புடன் சென்றவர் காவல்துறையிடம் சிக்கினார்

(விசுவமடு)

தருமபுரம் பகுதியில் கசிப்பு கொண்டு சென்ற நபரொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் கொள்கலனைக் கட்டியபடி இரவு 8.00 மணியளவில் கசிப்புக் கொண்டு சென்று கொண்டிருந்தவேளை கண்டாவளை வாசியே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் விசுவமடு காவல் பணிமனையினரிடம் ஒப்படைப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.

# மூதாளர் பேணலகத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா

அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தில் 2ஆம் ஆண்டு நிறைவு விழா கிளிநொச்சி கனகபுரத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் 23.04.2003 அன்று மாலை 4.00 மணிக்கு மேற்படி அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா இடம்பெற உள்ளது. இரண்டாம் ஆண்டு நிறைவு மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## முறைசாராக் கல்விப் பிரிவின்

# ஆடைக் கண்காட்சி நிகழ்வும் சான்றிதழ் வழங்கலும்

(உடையார்கட்டு)

உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் முறைசாராக் கல்விப்பிரிவின் ஆடை அமைத்தல் பயிற்சி நிறைவடைந்ததை முன்னிட்டு கண்காட்சியும், சான்றிதழ் வழங்கல் வைபவமும் நடைபெற்றது. இந்நிகழ்வு ஆடை அமைத்தல் பயிற்சி நெறி மாணவி செல்வி க.மதி தலைமையில் நிகழ்ந்தது.

கண்காட்சியை முறைசாராக் கல்விப் பொறுப்பாசிரியர் திருச்செல்வராசா திறந்து ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பயிற்சி விடயக்கருத்தை போதனாசிரியர் வே.இராஜேஸ்வரி வழங்கினார். சிறப்புரைகளை உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர் ராஜா திருச்செல்வராசா, புதுக்குடியிருப்புப் பிரதேச பொறுப்பாளர் பிறையாளன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. (19)

# இரவில் நுழையும் யானைக் கூட்டங்களால் பயிர்கள் பெருமளவில் துவம்சம்!

வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் கிராமத்தில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தற்போது சில வாரகாலமாக இரவு வேளைகளில் ஆனைவிழுந்தான் கிராமமக்கள் குடியிருப்பினுள் நுழையும் யானைக் கூட்டங்கள் குடியிருப்பினுள் பயிர்களை துவம்சம் செய்து வருவதாகத் தெரியக்கிடைத்துள்ளது.

இது சம்பந்தமாக அக்கராயன் காவல் பணிமனையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டும் எவ்வித பலனும் கிட்டவில்லையெனவும், தொடர்ந்தும் யானைக் கூட்டங்களின் அட்டகாசம் தொடர்வதன் காரணத்தினால் இரவு வேளைகளில் இக் குடியிருப்புக்களில் மக்கள் அச்சத்துடன் தங்கவேண்டியுள்ளதாகவும் குடியிருப்பு மக்கள் தெரிவித்துள்ளனர். (சோ,லோ)

# நாய்களுக்கும் இரத்த வங்கி

(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் மருத்துவர்கள் நாய்களிடமிருந்து இரத்தம் பெற்று நாய்களுக்கு அவசர சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தலைநகர் பாங்கொக்கில் வீட்டில் வளர்க்கப்படும் நாய்கள் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அனாதரவற்ற நிலையில் வீதிகளில் சுற்றித் திரிகின்றமையால் விபத்துக்களில் சிக்கி பலத்த காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பயனளிக்காமல் இறக்கின்றன. இதற்கு சிகிச்சையின் போது போதிய இரத்தம் வழங்கப்படாமையே காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத்தடுக்கும் முகமாக நாய்களுக்கு இரத்ததானம் செய்யப்பட வேண்டும் என நாய்ப் பிரியர்கள் வலியுறுத்தியுள்ளனர். இவ்வாறு இரத்ததானம் செய்யும் நாய் குறைந்த பட்சம் 30 கிலோ எடை இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தோட்டப்புற மக்கள் வருமானத்தில் 32 வீதத்தை மதுவுக்குச் செலவிடுகின்றனர்

## உணவுக்கும் அதேயங்கு செலவீடு

தோட்டப்பகுதி மக்கள் தங்களின் வருமானத்தில் 32 சதவீதத்தை மதுப்பாவனைக்காக செலவிடுகிறார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி தோட்ட மக்கள் தங்களின் வருமானத்தில் இருந்து உணவிற்காக நூற்றிற்கு 32 வீதத்தையும் வீட்டுப் பராமரிப்பிற்காக 2 வீதத்தையும் உடைகளுக்காக 13 வீதத்தையும் கல்விக்காக 8 வீதத்தையும் சுகாதாரத்திற்காக 1 வீதத்தையும் செலவிடுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

மதுப்பாவனைக்காக அதிகம் செலவிடுவதால் இம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதுடன் இவர்களது பிள்ளைகள் மந்த போசனைக்கும் உள்ளாகின்றனர். இளம் வயதுடைய யுவதிகள் உடல், உளரீயாகப் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆண் தொழிலாளர்கள் பிற்பகல் 1.30 மணியுடன் தங்கள் தோட்ட வேலைகளை முடித்துக்கொள்கின்றனர். மிகுதி நேரத்தை மதுப்பாவனைக்காக பணம் தேடுவதிலும் போதையிலும் செலவிடுகின்றனர் என பெருந்தோட்டத்துறை மனித அபிவிருத்தி அமைப்புத் தெரிவிக்கின்றது.

# புலிகள் பொறுமை காத்து வருகின்றனர்

# அதனைப் பலவீனமென்று கருதிவிடக் கூடாது!

## பாராளுமன்ற உறுப்பினர் கிருஸ்ணபிள்ளை

(மட்டக்களப்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுமையைக் கடைப்பிடித்து வருகின்றனர். இதனை வெறும் பலவீனமென்று கருதிவிட முடியாது. இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான கிருஸ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற நூல்நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் உரையாற்றுகையில், எமது நாட்டில் இனிமேல் யுத்தம் ஏற்படாது யுத்தத்திற்கான சந்தர்ப் பங்கள் ஏற்படுத்தப்படுகின்ற போதி லும் விடுதலைப் புலிகள் அவற்றை யெல்லாம் தட்டிக் கழித்து வருகின் றனர்.

புலிகளின் பொறுமையை வெறும் பலவீனம் என்று கருதிவிடக் கூடாது.

சமாதானத்தைக் குழப்ப முயற்சிக்கும் தரப்பினரை மக்கள் இனம் கண்டு அவர்களை புறம்தள் ளி விடவேண்டும் என்றார்.

# மட்டக்களப்பு நகருக்கான ரயில் சேவை மாத இறுதிக்குள் சீரடைந்துவிடும்!

## – சேவைகள் மீண்டும் இடைநிறுத்தம்

வாழைச்சேனை, மட்டக்களப்பு ரயில் சேவை இம்மாத முடிவிற்குள் வழமைக்கு திரும்பிவிடும் என ரயில் வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் 12ஆம் திகதி இச்சேவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 15ஆம் திகதி இரு ரயில்கள் இப்பாதையில் தடம் புரண் டதைத் தொடர்ந்து இச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ரயில்வே திணைக்களத்தின் பிரதம பொறியி யலாளர் அங்கீகாரம் அளித்ததைத் தொடர்ந்தே இச் சேவை ஆரம்பிக் கப்பட்டது.

1995ஆம் ஆண்டில் மட்டக்களப் பிற்கும், கொழும்பிற்கும் இடையி லான ரயில் சேவை நிறுத்தப் பட்டிருந்தது. மீண்டும் 17 கோடி 80 லட்சம் ரூபா செலவில் இப் பாதை திருத்தப்பட்ட பின்னர் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ரயில்கள் தடம் புரண்டதைத் தொடர்ந்து பத்தாயிரம் சிலிப்பர்க் கட்டைகள் கொண்டுவரப்பட்டு பாதை திருத்த வேலைகள் இடம் பெற்றுவருகின்றன.

# நன்னீர் மீன்பிடித் திட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நன்னீர் மீன்பிடித் திட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.அபிவிருத்தித் திட்ட நிதியுதவியின் கீழ் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

நன்னீர் மீன்பிடியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக் கில் இத்திட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது.

# தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையால் வார நாட்கள் அனைத்திலும் சேவை!

வடமராட்சி கிழக்கு ஆழியவளையி லுள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் சேவையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம் மக்களின் நன்மை கருதி இந்தச் சேவையை ஞாயிற்றுக் கிழமையிலும் நடத்த முடிவு செய்யப்பட்டதாக மருத்துவ மனை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் 3500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

முன்னர் இயங்கி வந்த மருதங்கேணி கிராமிய வைத்தி யசாலை, முள்ளியான் அரசினர் மத்திய மருந்தகம் என்பன சிறிலங்கா இராணுவ நடவடிக்கை களால் முற்றாகச் சேதமடைந் துள்ளன. இவற்றை செயற்பட வைக்க இதுவரை உரிய நடவ டிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந் நிலையில் இங்குள்ள மக்கள் 30 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டிய நிலையிலிருந்து வந்தமை குறிப்பி டத்தக்கது.

தற்போது இவற்றைக் கருத்திற் கொண்டே தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் தமது மருத்துவ சேவையினை இங்கு ஆரம்பித்ததோடு வார நாட்கள் முழுவதிலும் தமது சேவையை விரிவுபடுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# புத்தாண்டு தினத்தன்று நடந்த விளையாட்டு நிகழ்வுகள்

வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகம் வருடம் தோறும் புத்தாண்டுகளில் நடாத்தி வரும் மாபெரும் விளையாட்டுப் போட்டி இவ்வாண்டும் புத்தாண்டு நாளில் சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.00 மணிக்கு கேப்பாபி லவு அ.த.க. பாடசாலை முன்றலில் இருந்து மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமானது.

50 க்கும் மேற்பட்ட போட்டியாளர் பங்கு கொண்ட 16 கிலோமீற்றர்தூர மரதன் ஓட்டப் போட்டியில் ஒரு மணி ஆறு நிமிடத்தில் முதலாம் இடத்தை கு.கோகிலரூபனும், 2ஆம் இடத்தை செ.மதனரூபனும் பெற்றனர்.

தொடர்ந்து மாலை நிகழ்வாக முல்லைத்தீவு 3ம் கட்டை நந்திக் கடல் வெளியில் இரு பிரிவாக மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிக ளும் உழவு இயந்திரம் பெட்டி கொ ழுவுதல் போட்டிகளும் நடை பெற்றன.

எருது மாட்டு வண்டில் சவாரிப் போட்டியில் வற்றாப்பளை வின்ரா வினுசியா முதலாம் இடத்தையும் நாம்பன் மாட்டு வண்டில் சவாரிப் போட்டியில் முள்ளியவளை இ.லிகி தன் முதலாம் இடத்தினையும் பெற் றனர்.

உழவு இயந்திரம் பின் நோக்கிச் சென்று பெட்டி கொழுவிப் பின் நோக்கி ஓட்டுதல் போட்டியில் தி.ர மேஸ் முதலாம் இடமாகவும் முள்ளி யவளையைச் சேர்ந்த பொ.திரு நேசன் இரண்டாம் இடமாகவும் வற்றாப்பளையைச் சேர்ந்த புலேந் திரன் மூன்றாம் இடமாகவும் தெரிவா கினார்கள்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டி யவர்களுக்கான பரிசில்கள் வழங் கும் நிகழ்வு இன்று மாலை மேற்படி கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ஆ)

# வடக்கு – கிழக்கில் நோய்த்தடுப்பு முயற்சிகளுக்கு முன்னுரிமையளிப்பு!

## – சுகாதார அமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

வட-கிழக்கில் சுகாதார நடவ டிக்கைகளை மேம்படுத்தும் முயற் சியில் நோய் தடுப்பு நடவடிக்கை களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சமாதான நடவடிக்கைகள் வெற்றியளித்து வருவதைத் தொடர்ந்து வட-கிழக்கில் சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்து வதற்கு உதவி வழங்க பல வெளிநாடுகளும், நிறுவனங்களும் முன்வந்துள்ளன என சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பல நன்கொடை நிறுவனங் கள் இந்த உதவிகளை வழங்க முன்வந்துள்ள அமைப்புக்களில் சிலவாகும்.

## இந்தியாவில் நடந்த விபத்தில்

# வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மூன்று பேர் பலியாகினர்!

(வடமராட்சி கிழக்கு)

கடந்த 12 ஆம் திகதியன்று இந்தியாவில் இடம்பெற்ற வாகன விபத்தின்போது வடமராட்சி கிழக் கைச் சேர்ந்த மூன்று பேர் பலியா கியுள்ளனர்.

செம்பியன்பற்று வடக்கைச் சேர் ந்த பௌளினப்பு ஜோசப் வின்சன், வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த தாயும் மகனுமான சூசைபெனடிற் தவஞானசீலி நிர்மலா, சூசை பெனடிற் கொலின்சன் பெர்னாண்டோ (வயது-12) ஆகியோரே இச்சம் பவத்தில் பலியானவர்களாவர். இவர்களின் உடல்கள் இந்தியா விலிருந்து கடந்த வியாழனன்று அவர்களின் சொந்த இடமாகிய வடமராட்சி கிழக்கிற்கு உறவினர் களால் எடுத்துவரப்பட்டது.

இவர்கள் மூவரும் இந்தியாவில் உள்ள அன்னை வேளாங்கண்ணி கோவிலுக்கு வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது விபத்திற்குள் ளாகிப் பலியாகியுள்ளனர். (11)

## 5ஆம் ஆண்டு நீங்காத நினைவில்...



தாய் மண்ணில் முத்தாக 14 - 07 - 1974

தாயக மண்ணில் வித்தாக 20 - 04 - 1998

**சம்பவம்: மாங்குளம் ஒலுமடு நோக்கி முன்னேறிய இராணுவத்துடனான மோதலின் போது...**

# மேஜர் துஸ்யந்தன்/துவாரதன்

**இரத்தினசிங்கம் லோகநாதன் (வவா)**

**5ஆம் வட்டாரம், குமுழமுனை, முள்ளியவளை.**

விடுதலைக் கனவை நெஞ்சினில் சுமந்து
வீரத்தலைவன் அணி புகுந்த – மகனே
வடுச்சுமந்த வாழ்வை மாற்ற வரிப்புலியாகி
கனரகம் கரம் கொண்டு களம் மீட்டாய் – வீரனே
உன்விழி சென்ற இடமெல்லாம் பகைவன் விதி மாறியது
வீரத்தோடு சமராடி சுவர்க்கம் நீ கண்டாய் – நாம்
விழி சொரிய மலர்தூவி நெஞ்சில் உன் நினைவைச்
சுமக்கின்றோம்.

20.04.2003 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மதிய போசன நிகழ்வு இடம்பெற இருப்பதால் போராளிகள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நீங்காத நினைவுகளுடன்**
**அப்பா, அம்மா, அண்ணா,**
**அக்கா, அத்தான் (சுவிஸ்)**
**அண்ணி, மருமகன்.**

5ஆம் வட்டாரம்,
குமுழமுனை.

(2839)

## துயர் பகிர்வோம்

**அமரர் சுப்பிரமணியம் நடராசா**

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையில் பணியாற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.சத்தியமூர்த்தி அவர்களின் தந்தை அமரர் சுப்பிரமணியம் நடராசா அவர்கள் 09.09.2002 அன்று திருகோணமலையில் இறையடியெய்தினார். அன்னாரின் பிரிவில் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

**பணியாளர்,**
**நலன்புரிச்சங்கம்,**
**வலயக்கல்விப் பணிமனை,**
**முல்லைத்தீவு.**

(3095)



## சிந்தனைக்கு

பூரண அரசியல் தெளிவும்- விழிப்புணர்வும் ஒரு போராளிக்கு அவசியமானவை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-04-2003

# உரிய வழியல்ல...!

மூதூரில் ஏற்பட்ட பதற்ற நிலையானது சிலர் கொல்லப்படவும், பலர் காயமடையவும் காரணமாக இருந்ததோடு, ஊரடங்கு வரையும் செல்வதற்குக் காரணமாகியுள்ளது. நிலைமையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உயர் மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டியதாகியுள்ளது.

மூதூர் பிரதேசத்தில் இரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டமையாலும், இவ் இளைஞர்களில் ஒருவரின் தாயார் தற்கொலை செய்து கொண்டதாலும், இப்பதற்ற நிலை ஏற்பட்டதாக முஸ்லிங்களில் ஒரு தரப்பினர் கூறிக்கொள்ள முற்பட்டாலும். இப்பதற்ற நிலைக்கு முழு அளவிலான காரணம் அதுவல்ல. முஸ்லிங்களுக்குள் காணப்படும் அரசியல் / அதிகாரப் போட்டியே இத்தகையதொரு பதற்ற நிலை ஏற்படுவதற்கும், அப்பாவி மக்கள் துயரங்களை அனுபவிக்கவும் காரணமாகும்.

மூதூரில் இளைஞர்கள் கடத்தப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என முஸ்லிங்களில் ஒரு தரப்பினர் வழமை போலவே குற்றம் சாட்டியுள்ளனர். இக்குற்றச் சாட்டுக்கள் எதுவித ஆதாரமும் அற்றதொன்றாகும். முஸ்லிங்கள் கடத்தப்பட்டால் அது புலிகளாகவே இருக்கும் என்ற அனுமானத்தின் பாற்பட்டதுமாகும். சமாதானத்திற்கு விரோதமான சக்திகள்கூட இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பதைக்கூட அவர்கள் பரிசீலிக்கவில்லை.

முஸ்லிம் தரப்பினர் தமக்கிடையிலுள்ள அரசியல், அதிகாரப் போட்டிகள் குறித்தோ அதற்காக அவர்கள் எத்தகைய செயற்பாட்டில் ஈடுபடவும் தயாராக உள்ளமை குறித்தோ எதையும் வெளிப்படுத்துவதில்லை. ஆதாரங்கள் எதுவுமற்ற நிலையிலும் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டி அரசியல் ஆதாரம் தேட முனைகின்றனர். இதற்கு அவர்கள் எத்தகைய முன்யோசனைகளையும் மேற்கொள்வதில்லை. இதில் விடுதலைப் புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்களுடன் நல்லுறவைப் பேணுவதற்காக மேற்கொண்டுவரும் அண்மைக்கால நடவடிக்கைகளைக்கூட அவை கருத்திற் கொள்வதில்லை.

சரி, விடுதலைப் புலிகள்தான் இக்கடத்தலுக்குக் காரணம் என ஒரு பேச்சிற்கு வைத்துக் கொள்வோம். அவ்வாறானால் பொறுப்புள்ள அமைச்சர் என்ற ரீதியில் அவர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைதான் என்ன? களத்தில் இறங்கி நின்று பதற்றத்தை மேலும் மேலும் அதிகரித்து நிலைமையை மோசமடையச் செய்வதா? அன்றி உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதா? என்பதே ஆகும். ஆனால், அமைச்சர் ஹக்கீம் நடந்து கொண்ட முறையானது சரியான முறையாக இல்லை.

அமைச்சர் ஹக்கீம் உரிய முறையில் நடந்து கொள்வதானால் இச்சம்பவம் குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையே முதலில் அணுகியிருத்தல் வேண்டும். ஏனெனில், யுத்த நிறுத்த உடன்பாட்டின் பின்னர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரே இத்தகைய விவகாரங்களுக்குப் பொறுப்பானவர்களாக உள்ளனர்.

சரி, அமைச்சர் ஹக்கீம் யுத்த நிறுத்த உடன்பாட்டுடன் தாம் சம்பந்தப்பட்டவோ அன்றி அதன் மீது நம்பிக்கை அற்றவராகவோ இருந்திருப்பின் அவர் இவ்விவகாரம் குறித்து அரசாங்கத்தையே அணுகியிருக்க வேண்டும். ஓர் அமைச்சர் என்ற ரீதியிலும், ஆளும் கூட்டணியில் இடம்பெறும் கட்சி ஒன்றின் தலைவர் என்ற ரீதியிலும் அவ்வாறான நடவடிக்கையே பொறுப்புணர்வுடையதாக இருந்திருக்கும்.

ஆனால், அமைச்சர் என்ற ரீதியிலும், யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிவருபவர் என்ற ரீதியிலும் யுத்த நிறுத்த உடன்பாட்டையோ அன்றிக் கண்காணிப்புக் குழுவையோ அவர் தட்டிக் கழித்துவிடவும் முடியாது.

இவ்வாறு இருக்கையில், சம்பவ இடத்திற்கு நேரில் சென்று - அங்கு முகாமிட்டு இருந்தவாறு - பிரதமர் அங்கு வரவேண்டும் எனவும், பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் எனக் கோருவதும் முற்றிலுமாக 'பொலிட்டிக்கல் ஸ்ரண்ட்' ஆகவே இருக்கும். ஏனெனில், இவ்விவகாரத்திற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க களத்திற்குச் செல்வதினால் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அத்தோடு, பிரதமர் அங்கு செல்வதற்கான வாய்ப்பும் இல்லை. ஆனால், இது அமைச்சர் ஹக்கீமிற்கும் தெரியாததல்ல.

ஆகையினால், மூதூர் சம்பவத்தை அமைச்சர் ஹக்கீம் தனது அரசியல் பேரம் பேசுதலுக்கு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டு நிற்கின்றார் என்றே கருதவேண்டியுள்ளது. முஸ்லிம் காங்கிரசிற்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள், ஐ.தே. கட்சியிலுள்ள முஸ்லிம் பிரமுகர்களுடனான முரண்பாடுகள் என்பனவற்றால் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் அமைச்சர் ஹக்கீம் மூதூர் சம்பவத்தை வைத்து அரசியல் பேரத்தில் தன்னை வலுப்படுத்திக் கொள்ள முற்பட்டு நிற்கின்றார். இதனால், மூதூர் பிரச்சினைகளைத் தணியவிடாது பாதுகாத்துக்கொள்ள முற்பட்டு நிற்கின்றார்.

# படையினருக்கு குண்டு துளைக்கா அங்கிகள் இந்தியாவிடம் கொள்வனவு செய்ய ஏற்பாடு

## - உள்ளூர் உற்பத்தியில் ஆர்வம் இல்லை

(கொழும்பு)

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டு துளைக்காத் மேலங்கி சம்பந்தமாக சிறிலங்காப் படையினர் எந்தவித ஆர்வமும் காட்டவில்லை என்று அதனை உற்பத்தி செய்த உள்ளூர்த் தயாரிப்பாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஹர்சா சர்வதேச நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஜித் விஜயதுங்க கருத்து வெளியிடுகையில், தங்களது உற்பத்திப் பொருட்கள் அமெரிக்க உற்பத்திப் பொருட்களிலும் தரம் வாய்ந்தவை எனக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் மேலங்கியின் விலை 543 டொலராக இருந்த போதிலும் சிறிலங்கா இராணுவத்தினர் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்யவில்லை என்றும் குண்டு துளைக்காத மேலங்கி களை தலா 900 டொலர் விலையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இராணுவத்தினர் ஒழுங்கொன்றை மேற்கொண்டுள்ளனர் எனவும் அஜித் விஜயதுங்க கவலை தெரிவித்துள்ளார்.

# பொருளாதார மேம்பாட்டிற்கு உதவ நாணய நிதியம் 56 கோடி டொலர் உதவி

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டுவரை அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் சர்வதேச நாணய நிதியம் 56 கோடி 70 இலட்சம் டொலர்களை கடன் உதவியாக வழங்கவுள்ளது.

வாஷிங்டனிலுள்ள சிறிலங்கா தூதரகம் விடுத்த அறிக்கையில் இத்திட்டத்தின் அடிப்படையில் உடனடியாக 8 கோடி 10 இலட்சம் டொலர்களை சிறிலங்கா பெற்றுக் கொள்ளும் எனத் தெரிவித்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைப் பாராட்டியுள்ள சர்வதேச நாணய நிதியம் சமாதான நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கில் அரசின் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பெருமளவு கடன் வசதிகளை உதவி வழங்கும் நாடுகள் வழங்க வேண்டுமென தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் சிறிலங்காவுக்கு உதவி வழங்கிய முதலாவது ஸ்தாபனம் சர்வதேச நாணய நிதியமாகும்.

# ஓட்டுத்தொழிற்சாலை ஊழியர் கொடுப்பனவு எதுவுமின்றி அவதி

வன்னி மாவட்டத்தில் மிக முக்கியமான நிறுவனங்களில் ஒன்றான கூளாமுறிப்பு ஓட்டுத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு 13வருடமாக கொடுப்பனவுகளோ நிவாரணங்களோ இதுவரை வழங்கப்படாதுள்ளதால் அத் தொழிற்சாலை ஊழியர்கள் பெரும் துன்பம் அனுப்பவிக்கின்றனர்.

1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலையில் 150க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்து வந்தனர். 1990ஆம் ஆண்டு யுத்தம் மூண்டபோது அக்காலப்பகுதியுடன் இத் தொழிற்சாலை முற்றாக செயலிழந்து போக, அவ்ஊழியர்கள் இடப்பெயர்வுகளுக்கும் யுத்த நெருக்கடிகளுக்கும் மத்தியில் எதுவித கொடுப்பனவும் இன்றி இன்றுவரை அவலப்பட்டு வருகின்றனர்.

தமக்கு கொடுப்பனவு, நிவாரணம் வழங்குமாறு சம்பந்தப்பட்ட சகல அரச அதிகாரிகளையும் நாடியும் தமக்கு எம்முடிவும் கிடைக்கவில்லை என ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் புனர்வாழ்வு,புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவரும் வேளையில் தமக்கான கொடுப்பனவுகளையும் நிவாரணங்களையும் வழங்கி தமக்கும் புனர்வாழ்வு அமைக்குமாறும் அத்தொழிற்சாலை ஊழியர்கள் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

இத்தொழிற்சாலை இலங்கை அரச மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் கிளை நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ரிச்சட் பத்திரனவை அமைப்பாளராக நியமிக்க அனுரா கோரிக்கை

(கொழும்பு)

ரிச்சட் பத்திரனவை மீண்டும் அவரது தொகுதியில் அமைப்பாளராக நியமிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாடு பயணமாகி உள்ள சிறிலங்கா சனாதிபதி நாடுதிரும்பியதும் இது தொடர்பாக அவரிடம் விவாதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் ரிச்சட் பத்திரனவுக்கும் கட்சிக்குமிடையே கருத்து மோதல்கள் இடம் பெற்று வந்தமை தெரிந்ததே.

# கிளி. மாவட்ட குழு விளையாட்டுப் போட்டிகள் 2003

கிளி.மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி பிரதேசசெயலர் பிரிவுகளுக்கிடையிலான குழுப்போட்டிகள் கடந்த 2003-04-17ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 2003-04-20 ஆம் திகதிவரை நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. நேற்றுமுன்தினம் வரை நடந்து முடிந்த போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

கரப்பந்து ஆண்களுக்கான போட்டியில்1ஆம் இடத்தை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவும், 2ஆம் இடத்தைகண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவும் பெற்றுக் கொண்டன.

கரப்பந்து பெண்களுக்கான போட்டியில் 1ஆம் இடத்தை பளைப் பிரதேச செயலர் பிரிவும், 2ஆம் இடத்தை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவும் பெற்றுக்கொண்டன.

கபடி ஆண்களுக்கான போட்டியில் 1ஆம் இடத்தை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவும், 2ஆம் இடத்தை கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவும் பெற்றுக்கொண்டன.

கபடி பெண்களுக்கான போட்டியில் 1ஆம் இடத்தை கரைச்சி பிரதேச செயலர்பிரிவும்2ஆம் இடத்தை கண்டாவளை பிரதேச செயலர் பிரிவும் பெற்றுக்கொண்டன.

எல்லே ஆண்களுக்கான போட்டியில் . 1ஆம் இடத்தை கரைச்சி பிரதேச செயலர் பிரிவும், 2ஆம் இடத்தை பளைப் பிரதேச செயலர் பிரிவும் பெற்றுக்கொண்டன.

எல்லே பெண்களுக்கான போட்டியில் 1ஆம் இடத்தை கரைச்சி பிரதேச செயலர் பிரிவும் 2ஆம் இடத்தை கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவும் பெற்று வெற்றியீட்டி கொண்டன.

# சைக்கிள் ஓட்டப் போட்டிக்கு - பதிவு செய்யக் கோரல் -

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் ஆனையிறவு 3ஆம் ஆண்டு வெற்றிநாளை முன்னிட்டும், தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரின் 2ஆம் ஆண்டு நிறைவு நாளைபொட்டியும் நீண்டதூர துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி நடாத்தப்பெறவுள்ளது.

ஆண்களுக்கான மேற்படி துவிச்சக்கர வண்டிப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதியன்று நடாதப்பெறவுள்ளதால் இப்போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும் வீரர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்பதாக தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகம் அல்லது வன்னி மாவட்ட விளையாட்டுத்துறைச் செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இப்போட்டியில் வட-கிழக்கு மாகாணத்திலிருந்தும் போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாமெனவும் தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளனர். (சோ)

- அம்புலன்ஸ் வண்டி விவகாரம் -

# மாகாண சு.சே. பணிப்பாளரைக் கண்டித்து வவு. வைத்தியசாலையில் வேலை நிறுத்தம்

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலைக்கென உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி குறித்து எழுந்த சர்ச்சையால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நடவடிக்கையைக் கண்டித்து வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் நாளை ஒருநாள் வேலைநிறுத்தப் போரராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது;

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வவுனியா ஆதார வைத்தியசாலைக்கென வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பிற்கிணங்க எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த அம்புலன்ஸ் வண்டியை மீளத்தருமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கடிதம் மூலம் கேட்டபோது. இந்த விவகாரத்தைக் கைவிடும்படி அவர் கேட்டுக் கொண்டார். இதனையடுத்து தொடர்ந்து அம்புலன்ஸ் வண்டியைத் தருமாறு வலியுறுத்தியபோது வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரிக்கு இடமாற்றக் கடிதமே வந்து சேர்ந்தது. இது ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாக அமைந்துள்ளதைக் கண்டித்தே ஊழியர்களால் மாகாணப் பணிப்பாளருக்கெதிராக தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கை,

* மாவட்ட வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை உடன் கைவிட வேண்டும்.

* உடனடியாக குறிப்பிட்ட அம்புலன்ஸ் வண்டியை வைத்தியசாலையில் ஒப்படைக்க வேண்டும்.

* வவுனியா ஆதார வைத்தியசாலைக்கான ஆளணித் தேவைகள் புறக்கணிக்கப்படாது நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நாளை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்வதென்றும் இதற்கு 48 மணி நேரத்திற்குள் சாதகமான பதில் கிடைக்கப்பெறாத பட்சத்தில் தொழிற் சங்க நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்வதென தொழிற்சங்க பொதுச் சபைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# மூதூர் பிரச்சினையை அரசாங்கம் உரிய முறையில் கையாளவில்லை

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

மூதூரில் நிலவும் பதற்றமான சூழ்நிலைகளை சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு உரிய முறையில் கையாளவில்லை என்று ஜே.வி.பி. குற்றம்சாட்டி உள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல் மோதல் சம்பவங்கள் தொடர்பாக ஆராயும் குழுவொன்றை பிரதமர் மூதூருக்கு அனுப்பி வைத்திருப்பது, அவரது இயலாத் தன்மையை வெளிக்காட்டுகின்றது என அவ்வறிககையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அன்னை பூபதி நினைவாக இன்று விளையாட்டுப் போட்டி

(மட்டக்களப்பு)

அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி இன்று இடம்பெறவுள்ளது.

இந்த போட்டிக்கான ஏற்பாட்டினை விவேகானந்த சனசமூக நிலையம் மேற்கொண்டிருந்தது.

ஏறாவூர் வீரபத்திர சுவாமி ஆலய முன்றலில் தேவராஜன் தலைமையில் பிற்பகல் 2.00 மணிக்கு இப்போட்டிகள் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் அவர்களுடன் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாஹீர் மௌலானா அவர்களுடன் மட்டு. அம்பாறை மாவட்ட நிருவாகப் பொறுப்பாளர் றெஜிலோலட், தளபதி தாத்தா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

# கரைதுறைப்பற்றுப் பகுதியில் நெல் கொள்வனவு செய்யக் கோரல்

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் காலபோக நெற் செய்கை மூலம் அதிகளவிலான நெல் கிடைக்கப்பெற்றும் விவாயிகள் சரியான முறையில் சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு கரைதுறைப்பற்று பிரதேசச் செயலர் அவர்கள், கமநல அபிவிருத்தி திணைக்களங்களுக்கு நெல்லினை கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை நீக்குமாறு கூறியுள்ளார். நெல் கொள்வனவு செய்வதன் மூலமே விவசாயிகள் பயன் அடையலாம் என விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது. (20)

# முல்லைத்தீவு ம.வி.யை புனரமைக்க ஏற்பாடு

இராணுவ நடவடிக்கை காரணமாக சிதைவுண்டு காணப்படும், முல்லைத்தீவு மகாவித்தியாலயம் 1996ஆம் ஆண்டு முல்லைமண் மீட்கப்பட்டும் எதுவித புனரமைப்பும் செய்யாமல் காணப்பட்டது. மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதால் பெருமளவான மாணவர்கள் தற்போது கல்வி கற்று வருகின்றனர். தளபாட வசதியோ, கட்டட வசதியோ போதாமையால் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், முல்லை மாவட்ட அரச அதிபரின் பெரும் முயற்சியினால் நிக்கோட் நிறுவனத்தால் 9 மில்லியன் ரூபாவும், ஜேர்மன் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தால் 3.3 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் புனரமைப்புக்கான சகல வேலைகளும் நடைபெறும் என முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார். (20)

# படகுச்சேவை ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலைக்கும் மூதூருக்குமிடையிலான பயணிகள் படகுச்சேவை அடுத்தமாதம் தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுவந்த ஒரே ஒரு படகு கடந்த வருடம் மே மாதம் விபத்திற்குள்ளானதையடுத்து சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

# முல்லையில் ஐஸ் தொழிற்சாலை அமைக்க ஆரம்ப வேலை பூர்த்தி

சிரான் நிதியுதவியுடன் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் முல்லைத்தீவில் ஐஸ் தொழிற்சாலை அமைகக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப வேலைகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளதாக முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் தெரிவித்தார்.

கடற்றொழிலே முல்லைத்தீவில் அதிகமாக உள்ளதால் மீன்,இறால் போன்றவற்றைப் பாதுகாப்பாக பதப்படுத்தி வேறு மாவட்டங்களுக்கு அனுப்பவேண்டிய தேவை உள்ளது. இதற்கான ஐஸ் கொழும்பிலிருந்தே. கொண்டு வரவேண்டியுள்ளது. இதனால் மீனவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இதன் அடிப்படையிலேயே இவ் ஐஸ் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுளளது எனவும்தெரிவித்தார். (20)

# அம்பாறை மாவட்டத்திற்கு ரயில் பாதை அமைக்கத் திட்டம்

அம்பாறை மாவட்டத்திற்குப் புகையிரதப்பாதையை விஸ்தரிப்பதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னம்பிட்டியிலிருந்து கண்டியூடாக அம்பாறையை அடைந்து அங்கிருந்து பொத்துவில் வரை புகையிரதப்பாதை அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

100கிலோ மீற்றர் நீளமான இப்பாதைக்கு 500கோடி ரூபா செலவாகும் என தெரிவிக்கபடுகிறது.

# கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

இராமையா ஜெகதீஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை இல (740973860 V) கிளிநொச்சியில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.(சோ)

# மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு நிக்கொட் நிதி உதவி

கரைதுறைப்பற்றுப் பகுதிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் மீளக்குடி யமரும் மக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு தலா 25000 ரூபா வீதம் வழங்கப்படுவதாக உதவி அரச அதிபர் தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டு முல்லைப் பிரதேசத்திற்குட்பட்ட பகுதியான வட்டுவாகல் தொடக்கம் செம்மலை வரையான 13 கிராம அலுவலர்களுக்குட்பட்ட பகுதி மக்களுக்கு வன்னி புனர்வாழ்வு அமைச்சின் நிதி உதவியாக ஒரு குடும்பத்திற்கு தலா 15000 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

அதன் தொடர் நடவடிக்கையாகவே 15000 ரூபா பெற்றுக் கொள்ளாத குடும்பங்கள் உட்பட கரைதுறைப்பற்று பகுதி அனைத்துப் பிரதேச மக்களுக்கும் நிக்கொட் நிறுவனம் 25000 ரூபா வீதம் வழங்கி வருகின்றது. அதன் முதற்கட்டமாக குமுழமுனைக் கிராமத்தில் 1299 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து ஏனைய கிராமங்களுக்கும் வழங்கப்படும் எனவும் கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் தெரிவித்தார். (20)

# பிரதான வீதியில் மதகு உடைந்ததால் வீதிப்போக்குவரத்து சிரமம்

கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக மட்டக்களப்பு -வாழைச்சேனை பிரதான வீதியிலுள்ள பெரியமதகு உடைந்துள்ளதன் காரணமாக போக்கு வரத்துக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

அன்றாடம் அதிகளவு வாகனங்கள் போக்குவரத்துச்செய்யும் வீதியில் இம் மதகு உடைந்துள்ளதால் இப்பொழுது வீதியின் ஓரமாகவே வாகனங்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் செல்ல முடியாது பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து வீதி அதிகார சபை இதுவரை கவனம் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர்....

கிளி.நகர் வலயப் பொறுப்பாளர் பரந்தாமன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதி அவர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை கிளி.மாவட்ட பெண்கள்மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் மலர் ஏற்றிவைத்ததுடன் மலர்மாலையையும் அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார்.அடுத்து பொதுமக்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் இந்நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேச வர்த்தக சங்கத்தலைவர் கந்தசாமி தலைமையிலான இந்த நிகழ்வின் பொது ஈகச்சுடரினை புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சண்முகநாதன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நினைவுரைகளும் சிறப்புரைகளும் இடம்பெற்றன. சிறப்புரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஆகியோர் நிகழ்த்தினர்.

நெடுங்கேணி பிரதேசத்தில் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில், நெடுங்கேணிப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை இப்பிரதேச உப தலைவர் சிவபாதசுந்தரம் ஏற்றினார்.

உடையார்கட்டில் அமைந்துள்ள மட்டு-அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்தில் போராளி இராசு தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந் நிகழ்வில் பொதுச் சுடரினை ஜெயந்தன்படையணி மருத்துவப்பொறுப்பாளர் ரவிமோகன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடி ஏற்றலைத் தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு அன்பரசி படையணி சிறப்புப் பொறுப்பாளர் செல்வி. மீரா சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

திருமுறிகண்டி வலயத்தில் இந் நிகழ்வு சிறப்புற இடம்பெற்றது. இதில் தேசியக்கொடியினை கனகாம்பிகை, முறிகண்டி வலயப் பொறுப்பாளர் சேரமேஸ் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நினைவுரைகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

கிளிநொச்சி நகரில் நேற்றுப் பிற்பகல் 7.45 மணிக்கு சந்திரன் பூங்காவில் இடம்பெற்ற நிகழ்வு பொதுச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது. இந்நிகழ்வில் சிறப்புரைகளை செல்வம் மாமா மற்றும் அரசியல்துறையைச் சேர்ந்த ஜெகன் ஆகியோர் ஆற்றினர். அதனைத்தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்திவெளி, கிரான் பகுதிகளில் நேற்று அன்னைபூபதி நினைவு நாளை முன்னிட்டு உண்ணாவிரதம் நடைபெற்றது. கிரான் அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் சந்திவெளியில் நடைபெற்ற உண்ணாவிரத நிகழ்வில் பாலையடி தோணா, திகிலிவெட்டை போன்ற பகுதிகளைச் சேர்ந்த பெருமளவான மக்கள் உண்ணாநோன்பிருந்தனர். அதே வேளை கிரான் பகுதியிலும் உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்றது. அதேவேளை ஆலயங்களிலும் விசேடபூசைகள் நடைபெற்றன.

(சோ,லோ,09)

## பிரி...

மட்டக்களப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அமுலாக்கம் குறித்து படைத்துறை அதிகாரிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

நேற்று மாலையே அவர் மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றார்.

## சமாதானத்தை....

துணைபோகாது தமிழ் முஸ்லிங்கள் மூதூரில் முன்னர் போல் சகோதரர்களாக வாழ வேண்டும் என்றும் திலக் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில்,

முஸ்லிங்கள் குற்றம் சாட்டுவதற்கேற்ப இளைஞர்கள் கடத்தப்பட்டதற்கும் தங்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று இரண்டாவது தடவையாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளதான மூதூர் கிழக்கிற்கான படை முகாம் வழியான பாதை துண்டிக்கப்பட்டதன் விளைவாக பல ஆயிரக்கணக்கான மக்களின் உணவு விநியோகம் மற்றும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இவற்றை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ள வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, முஸ்லிம் சமயப் பிரமுகர்கள் விடுதலைப் புலிகளுடன் சந்திப்பு ஒன்றை மேற்கொள்வதற்காக பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மூதூரில்....

சட்டம் அமுல்ப்படுத்தப் பட்டது.

இதேவேளை, இடம்பெயர்ந்துள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்ல தயக்கம் காட்டிவருகின்றனர். வீடுகள் தீமூட்டி எரிக்கப்பட்ட நிலையில் தங்க இருப்பிடமின்றி தவிக்கின்றனர். இந் நிலையில் முழுமையான அமைதி நிலை உருவாகும் வரை சொந்த இடத்திற்குப் போகப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# கலந்துரையாடல்

வட்டக்கச்சிப் பிரதேச வர்த்தக சங்கத்தின் கலந்துரையாடல் வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில வர்த்தக சங்கத்தலைவர் சுரேஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வேளினி கருத்துரைகளை வழங்கினார். புதிய நிர்வாக சபைத்தெரிவும் நடைபெற்றது. வர்த்தக சங்கத்தின் விதிமுறைகள் தொடர்பாகவும், எமது தாயகத்தின் பொது நிகழ்வுகளில் வர்த்தக சங்கத்தினரின் பங்குகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (12)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.